**V. NARAYANASAMY**
CHIEF MINISTER
GOVERNMENT OF PUDUCHERRY

सत्यमेव जयते

© Off. : 0413-2333399, 2335530
2335328
Fax : 0413-2333135
Res. : 5, Ellaiamman Koil Street
Puducherry-605 001
© 0413-2339099
e-mail: cm.pon@nic.in

Date : 01.09.2017

# பக்ரீத் வாழ்த்துச் செய்தி

02.09.2017 அன்று பக்ரீத் கொண்டாடும் புதுச்சேரி மாநில மக்கள் அனைவருக்கும் குறிப்பாக இஸ்லாமிய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த பக்ரீத் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மனித சமுதாயம் அமைதியாகவும், மனநிறைவாகவும் வாழ வேண்டும் என்ற புனித குரானின் வழிகாட்டுதல்படி மனிதன் தனது அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நல்ல வழிமுறைகளைப் போதித்தவர் நபிகள் நாயகம். நபிகள் நாயகத்தின் போதனைகள் மனித குலத்திற்கு பொதுவானவையாகத் திகழ்கின்றன. இந்த பக்ரீத் திருநாளில், மானுட சமுதாயத்தின் மேன்மைக்காகப் பாடுபட்ட நபிகள் நாயகத்தின் தியாகப் பண்புகளை நினைத்து அவர்காட்டிய உன்னதமான வழியில் மனிதநேயம் தழைக்க அர்ப்பணிப்பு உணர்வுடன் திகழ நாம் உறுதியேற்க வேண்டும். இஸ்லாமியர்கள் அமைதியை விரும்புகிறவர்கள். மற்ற மதத்தின் கோட்பாடுகளையும் மதித்து நடக்கும் நற்பண்புடையவர்கள். தியாகம் செய்து மற்றவர்களை நேசிப்பதை நபிகள் நாயகம் போதித்துள்ளார்கள்.

அன்பிற்கும் தியாகத்திற்கும் இறையருள் உண்டு என்பதைக் காட்டும் திருநாளான இந்த பக்ரீத் நன்னாள், சகோதரத்துவம் மற்றும் மத நல்லிணக்கத்தை மேம்படுத்துவதாக அமையட்டும் என்று கூறி, பக்ரீத் பெருநாளைக் கொண்டாடும் புதுச்சேரி மாநில இஸ்லாமிய மக்கள் அனைவரது வாழ்விலும் வளமும் நலமும் பெற்று இன்பம் பெருகிட எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

(வே. நாராயணசாமி)